# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8073096
C

1. District மாவட்டம் : விருதுநகர்

PS: ஊ.த.க பிரிவு, காவல்நிலையம் விருதுநகர்

Year: 2018 ஆண்டு | FIR No.: 08/2018 மு.த.அ. எண் | Date: 31-10-2018 நாள்

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்: Sec. 7 of PC Act
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: (Amendment 2018)
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 24-10-2018 மற்றும் | Date from : நாள் முதல் 30-10-2018 | Date to : நாள் வரை
Time Period : நேர அளவு 0900 hrs | Time from : நேரம் முதல் 11.30 hrs | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31-10-2018 0900 hrs | Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : 65 கி.மீ தென் கிழக்கு.
: ஊரக மின் உதவி பொறியாளர் அலுவலகம், தளவாய்புரம். இராஜபாளையம் தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. ச. ராம்குமார் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. சங்கிலி மாடன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1991 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் கூலி | (g) Address : முகவரி கதவு எண். 133, நாடார் மாரியம்மன் கோவில் தெரு, தெற்கு தேவதானம், இராஜபாளையம் தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. பால்பாண்டியன்.
மின் உதவிப் பொறியாளர் (ஊரகம்), தளவாய்புரம்.
இராஜபாளையம் தாலுகா. விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

[illegible] தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் இன்று 31.10.2018 ம் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் அலுவலக பணியில் இருந்த போது இராஜபாளையம் நகர், தெற்கு தேவதானம், கதவு எண் 133, நாடார் மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த திரு. சங்கிலி மாடன் என்பவரின் மகன் திரு. ச. ராம்குமார் என்பவர் விருதுநகர் லஞ்ச ஒழிப்பு பிரிவில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் ச. ராம்குமார், வயது 27/2018, த/பெ சங்கிலி மாடன், கதவு எண். 133, நாடார் மாரியம்மன் கோவில் தெரு, தெற்கு தேவதானம், இராஜபாளையம் நகர், விருதுநகர் மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் எனது தாய் தந்தையுடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு உடன் பிறந்த இரண்டு சகோதரிகள் மட்டும் உள்ளனர். அவர்களை வெளியூரில் திருமணம் செய்து கொடுத்து தனித்தனியே குடியிருந்து வருகிறார்கள். எனக்கு திருமணம் ஆகவில்லை. [தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் R. ஆமிநாதன்..... பதவி ஆய்வாளர்... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 31/10/2018
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு S. R[signature]
31.10.18

Name: பெயர் S. VIMALA.
Rank: நிலை INSPECTOR No. எண் .........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
31.10.2018 11.30 hrs.

நான் குடியிருந்துவரும் முகவரியில் கண்ட கதவு எண்.133 வீடானது எனது பாட்டையா (அப்பாவின் அப்பா) திரு.மாரியப்ப நாடார் பெயரில் இருந்தது. அந்த வீட்டை சமீபத்தில் எனது தந்தை திரு.சங்கிலிமாடன் பெயரில் மாற்றி, அந்த வீட்டிலிருந்த மின் இணைப்பையும் எனது தந்தை பெயரில் மாற்றி அந்த வீட்டில் எனது தாய், தந்தையுடன் குடியிருந்து வருகிறேன். அந்த வீடானது கட்டைகுத்து வீடாகவும், பழைய வீடாகவும் இருந்ததால் அதை இடித்துவிட்டு புதிய வீடு கட்டலாம் என்று எண்ணி முறைப்படி பஞ்சாயத்து அனுமதிபெற்று கான்கிரீட் வீட்டை கட்டினேன். அவ்வாறு அந்த வீட்டை கட்டும்போது ஏற்கனவே இருந்த மின் இணைப்பை (மின்இணைப்பு எண்.514) துண்டிக்காமல் அதே மின் இணைப்பை பயன்படுத்தி நான் வசிக்கும் பகுதிக்கு அதிகாரம் உள்ள தளவாய்புரம் ஊரக மின் உதவிப் பொறியாளர் திரு.பால்பாண்டியன் அனுமதியுடன் வீட்டு கரண்ட் கட்டணத்தை கட்டுமானப் பணிக்காக கடை கரண்ட் கட்டணமாக (Tariff) மாற்றி, அதன்பிரகாரம் தற்போதுவரை மின் கட்டணத்தை கட்டிவருகிறேன். இந்த சூழ்நிலையில் வீடு கட்டி முடித்து திரும்பவும் கடை கரண்ட் கட்டணத்தை வீட்டுக் கரண்ட் கட்டணமாக (Tariff) மாற்றுவதற்கு எனது அப்பாவுடன் நான் வசிக்கும் பகுதிக்கு அதிகாரம் உள்ள தளவாய்புரம் ஊரக மின் உதவிப் பொறியாளர் திரு.பால்பாண்டியன் அவர்களை கடந்த 24.10.2018ஆம் தேதியன்று காலை சுமார் 9.00 மணியளவில் அவரது அலுவலகத்திற்கு சென்று சந்தித்து என் அப்பாவின் பெயரில் மனுக் கொடுத்தேன். அவர் அந்த மனுவைப் பெற்றுக்கொண்டு அந்த மனுமீது நடவடிக்கை எடுக்க, அதாவது நான் ஏற்கனவே கட்டிவரும் கடை கரண்ட் கட்டணத்தை வீட்டுக் கரண்ட் கட்டணமாக (Tariff) மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அவருக்கு ரூ.1000/- கொடுக்கவேண்டும் என்றும், அவ்வாறு ரூ.1000/- கொடுக்கவில்லை என்றால் உங்கள் மனுமீது நடவடிக்கை எடுக்க இயலாது என்றும் கூறிவிட்டார். ஆகையால் எதுவும் பேசாமல் நானும் என் அப்பாவும் வந்துவிட்டோம். நேற்று 30.10.2018ஆம் தேதி என்னுடைய அப்பா என்னிடம் இ.பி. ஆபீஸ் சென்று திரும்ப என்ன என்று கேட்டுவா என்று சொன்னார். ஆகையால் நான் மட்டும் நேற்று 30.10.2018ஆம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் தளவாய்புரம் ஊரக மின் உதவிப் பொறியாளர் அலுவலகத்திற்குச் சென்று ஊரக மின் உதவிப் பொறியாளர் திரு.பால்பாண்டியன் அவர்களை சந்தித்து நாங்கள் கொடுத்த மனு சம்பந்தமாக கேட்டேன். அப்போதும் அவர் ஏற்கனவே நானும் என்னுடைய அப்பாவும் சென்று மனுக்கொடுத்தபோது கேட்ட ரூ.1000/- கொண்டுவந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் இல்ல சார், வீடே ரெம்ப கஷ்டப்பட்டுத்தான் கட்டுகிறோம் என்றும்,

அதனால் நீங்க பார்த்து செய்யுங்க சார் என்றும் சொன்னேன். அதற்கு அவர் அதெல்லாம் ஒன்றுமில்லை, நீங்க கஷ்டப்படுற ஆளுன்னு தெரியுறதுனாலதான் மத்தவங்ககிட்ட கேட்கிற மாதிரி கேட்காம ரெம்ப குறைச்சு ரூ.1000/- கொடுக்க சொல்றேன் என்றும், கண்டிப்பாக அந்த ரூ.1000/-ஐ கொண்டுவந்து கொடுத்தால்தான் உங்க மனுமீது நடவடிக்கை எடுப்பேன் என்றும் கறாராக கூறிவிட்டார். நானும் வேறுவழியின்றி சரியென்று கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டு அன்று (30.10.2018) இரவு இந்த விசயங்களை என்னுடைய அப்பாவிடம் சொன்னேன். அதற்கு அவர் ரூ.1000/- கொடுத்து கரண்ட் மாற்ற வேண்டாம் என்றும், நீ போய் காலையில விருதுநகர் லஞ்சஒழிப்புத்துறையில கம்ளெயிண்ட் பண்ணுன்னு சொன்னார். எனக்கும் நாமே கஷ்டப்பட்டு வீட்டை கட்டிக்கிட்டு இருக்கோம், இதுல இவர்வேறு அவர் செய்யவேண்டிய நியாயமான வேலைக்கு ரூ.1000/- லஞ்சமாக கேட்கிறாரே என்று மனவேதனைப்பட்டு, ரூ.1000/- லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாமல், அவர் கேட்ட ரூ.1000/-த்தை ஏற்பாடு செய்து கொண்டு இன்று 31.10.2018ம் தேதி காலை 9.00 மணிக்கு விருதுநகர் லஞ்சஒழிப்புத்துறை அலுவலகம் வந்து, நான் ஏற்கனவே கட்டிவரும் கடை கரண்ட் கட்டணத்தை வீட்டுக் கரண்ட் கட்டணமாக (Tariff) மாற்றுவதற்கு என் அப்பா பெயரில் கொடுத்த மனுமீது நடவடிக்கை எடுப்பதற்கு என்னிடம் ரூ.1000/- லஞ்சம் கேட்ட தளவாய்புரம் ஊரக மின் உதவிப் பொறியாளர் திரு.பால்பாண்டியன் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (Sd)(S.Ramkumar) 31.10.18 Sir, Received the above computer typed complaint on 31.10.2018 at 09.00 hrs. The genuiness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecendents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Virudhunagar Vigilance and Anti Corruption Cr.No.8/2018 u/s 7 of PC Act (Amendment) 2018 at 1000 hrs. today on 31.10.2018 and took up for investigation. (Sd) (S.Vimala) 31.10.2018 Inspector of Police, V&AC, Virudhunagar.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble Chief Judicial Magistrate Court/Special Judge for Prevention of Corruption Act 1988 cases, Srivilliputhur and the copies submitted to the concerned officers.

31/10/2018
(S.VIMALA)
INSPECTOR OF POLICE
V&AC Virudhunagar.